## மாலிம்பட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாலிம்பட பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாலிம்பட பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் கூட்டுத் தொகையில் ரூபா 72,236,488 தொகையான வருமானமும் ரூபா 77,193,241 கூட்டுத்தொகையான செலவினமும் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் பிளிசர செயற்திட்டத்திலிருந்து நன்கொடையாக 2012 ஒக்தோபர் 23 ஆந் திகதி கிடைத்த ரூபா 1,479,000 பெறுமதியான எஸ்பீஆப்டீ 1588 ஆம் இலக்க கழிவுப் பொருட்களைக் கொண்டுசெல்லும் டேலரின் பெறுமதி கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 175,444 பெறுமதியான உள்ளக இணைப்பு சிறுகற்கள் உற்பத்தி செய்யும் இயந்திரம் நிலையான சொத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக்கூற்றின் பிரகாரம் நிலுவையாக இருந்த ஏனைய வருமானக் கணக்கின் பெறுமதி ரூபா 49,999,237 தொகையாக இருந்த போதிலும் பேரேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 72,783,319 ஆனமையால் ரூபா 22,784,082 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.2 தீர்க்கப்படாத கணக்குகள்

(அ) கடந்த பல ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,116,559 தொகையான கடன்கொடுத்தோர் மீதியையும் ரூபா 1,184,540 தொகையான கடன்பட்டோர் மீதியையும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 66,399 மற்றும் ரூபா 47,271,801 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 134,560,960 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 598,225 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 797,709 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 754 | 546 | 106 |
| (ii) | வாடகை | 1,749 | 1,834 | 91 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 379 | 410 | 50 |
| (iv) | ஏனைய வருமானம் | 18,697 | 7,302 | 49,999 |

#### 2.2.2 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஆதன வரி ரூபா 280,070 ஆகும். 2006 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் நிலுவை வரியின் அளவு அதிகரித்திருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு சபைச் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையிலிருந்தும் நான்கு இறைச்சிக்கடை வியாபாரிகளிடமிருந்தும் 1999 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நிலுவையாக இருந்த ரூபா 91,106 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 133,333 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 881,308 |

**2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

2.3.1 சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற 26 நிர்மாணங்கள் காணப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் சபை அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(vii) இன் (உ) மற்றும் (எ) மற்றும் 126(ix)(உ) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.2 மீளாய்வாண்டின் போது உள்ளக தொடர்புபடுத்துதல் சிறுகற்கள் உற்பத்தி செய்யும் இயந்திரம் 2012 சனவரி 16 ஆந் திகதி கொள்வனவு செய்வதற்காக ரூபா 175,644 தொகையும், மின்சார வழங்கலுக்கான உப பாகங்களுக்காக ரூபா 19,905 தொகையும், தண்ணீர் தாங்கி நிர்மாணிப்பதற்காக ரூபா 16,400 தொகையுமாக ரூபா 211,949 கூட்டுத் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2013 மே 27 ஆந் திகதிய பௌதீக பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்று வைக்கப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்தின் கீழ் செலவினங்கள் மூலதன செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையினால் இலக்கிடப்பட்ட ரூபா 850,500 வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

2.3.3 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 சபையினால் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 வீதி விளக்குகளைப் பராமரித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கை 91 ஆக இருந்த போதிலும் 1014 விளக்குகளைப் பராமரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் மற்றும் உபகரணங்கள், பராமரிப்பாளருக்கான சம்பளம் போன்றவைகளுக்காக ரூபா 354,975 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வீதி விளக்குளைப் பராமரிப்பதற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் பராமரிப்பிற்காக அந்த சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 29,158 தொகை 2013 மே 26 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(இ) மின்சக்தி, எரிபொருள் அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.4 ஆம் பந்தியின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பராமரிக்கப்பட்டிராதுடன் விளக்குகளைப் பொருத்தும் போது வீதி விளக்குகளின் மின்சார நுகர்வு உரிய பிரதேசத்தின் பொதுச் செயற்பாடுகள் மற்றும் நானாவித நுகர்வோர்களின் 3 சதவீத அளவினை விஞ்ச முடியாதிருந்த போதிலும் சபை அது தொடர்பாகக் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் கூட்டுப்பசளை உற்பத்திற்காக 50 கூட்டுப்பசளை பரல்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 145,100 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 42,000 பெறுமதியான 15 பரல்கள் 2013 மே மாதம் வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் சபை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட பரல்களிலிருந்து கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்படுகின்றதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலை | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 11 | 12 |
| ஆரம்ப நிலை | 09 | 09 |
| ஏனைய (அமைய, தற்காலிக) | 04 | 17 |
| | 25 | 39 |

(ஆ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளுக்காக ரூபா 6,213,000 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 9,162,579 ஆனமையால் சபை நிதியத்திற்கு ரூபா 2,949,574 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பாக ஏற்பட்டிருந்தது.

(இ) 2002 சனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இலக்கம் 14 மற்றும் 28 இன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 08 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,186,041 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுநிருப ஆலோசனை மீறி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட பொறுப்பினை ஏற்கவேண்டியிருந்தமையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கணக்கீடு